பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 10 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடியும், ஸ்பெயின் நாட்டு பிரதமர் திரு **Pedro Sanchez**-ம் இணைந்து **C-295** ரக போர் விமான உற்பத்தி வளாகத்தை வதோதராவில் இன்று காலை தொடங்கி வைத்தனர்.
- உலக அளவில் விமான உதிரி பாகங்களை தயாரிப்பதில் இந்தியா நம்பிக்கைக்குரிய நாடாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- ஊழல் தடுப்பு கண்காணிப்பு வாரம் இன்று முதல் ஒருவார காலத்திற்கு கடைபிடிக்கப்படுகிறது.
- அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இன்று மாலை தீபாவளி கொண்டாடுகிறார்.
- 23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.,

*----- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடியும், இந்தியாவிற்கு வருகை தந்துள்ள ஸ்பெயின் நாட்டு பிரதமர் திரு **Pedro Sanchez**-ம் இணைந்து **C-295** ரக போர் விமான உற்பத்தி வளாகத்தை இன்று காலை தொடங்கி வைத்தனர்.

போர் விமானங்களின் கண்காட்சியையும் அவர்கள் பார்வையிட்டனர்.

வதோதராவில் உள்ள டாடா விமான வடிவமைப்பு வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு நரேந்திரமோடி உலக அளவில் விமான உதிரி பாகங்களை தயாரிப்பதில் இந்தியா நம்பிக்கைக்குரிய நாடாக திகழ்கிறது என்று கூறினார்.

இன்று தொடங்கப்பட்டுள்ள இந்த போர் விமான உற்பத்தி மையத்தின் மூலம் உள்நாட்டு தயாரிப்பு அதிகரிப்பதுடன், உலகிற்கே தேவைப்படும் உபகரணங்களை தயாரிக்கும் மையமாக இந்தியா திகழும் என்று எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியா - ஸ்பெயின் இடையேயான நட்புறவு மேலும் வலுப்பெறும் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புத்துறையினர் இந்தியாவின் திறன் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய பிரதமர், உள்நாட்டு விமானங்களை தயாரிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்றும் தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பாதுகாப்பு உற்பத்தியில் ஆயிரம் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு பொருட்கள் ஏற்றுமதி 30 மடங்கு அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

உலகில் உள்ள 100 நாடுகளுக்கு பாதுகாப்பு உபகரணங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா - ஸ்பெயின் மக்களிடையேயான நல்லுறவு மேலும் வளர்ந்து வருவதாகத் தெரிவித்த திரு நரேந்திரமோடி, உணவு, திரைப்படங்கள், கால்பந்து உள்ளிட்டவற்றிலும் வலுப்பெற்று வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஸ்பெயின் பிரதமர் திரு **Pedro Sanchez**-ம் இந்தியா உலகின் உற்பத்தி மையமாக உயர்ந்து வருவதாகக் கூறினார்.

பல துறைகளில் வளர்ச்சி கண்டு வரும் இந்தியாவுடன் போர் விமான உற்பத்தியில் ஈடுபடுவது தமது நாட்டிற்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாகும் என்று தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் தலைமையில் சர்வதேச அளவில் இந்தியாவின் நிலை உயர்ந்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், வளரும் நாடுகளுக்கு ஒரு முன்னோடியாக திகழ்வதாகக் குறிப்பிட்டார்.

விமான உற்பத்தி மற்றும் எரிசக்தி துறையில் முதலீடு செய்ய விரும்புவதாகவும் ஸ்வெயின் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக இரு தலைவர்களும் வதோதரா விமான நிலையம் முதல் டாடா விமான வடிவமைப்பு வளாகம் வரை சாலை வழியாக சென்றனர்.

சாலையின் இருபுறங்களிலும் குழுமியிருந்த மக்கள் அவர்களுக்கு பெரும் வரவேற்பு அளித்தனர்.

இரு நாடுகளின் கலாச்சார நடனங்களும், கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

விமான வடிவமைப்பில் டாடா நிறுவனம் தவிர பாரத் எலெக்ட்ரானின்ஸ், பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் போர் விமான உற்பத்தியில் பங்கேற்க உள்ளதாக அவர் கூறுகிறார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ் முதல் முறையாக தனியார் நிறுவனம் விமானங்களை தயாரிக்கவுள்ளது.

பல்வேறு சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் இந்த உற்பத்தியில் பங்கேற்க உள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் 56 போர் விமானங்கள் 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்திய விமானப் படையில் சேர்க்கப்படும்.

இதில் 40 விமானங்கள் வதோதரா மையத்தில் இருந்து தயாரிக்கப்படும் என்றும், மீதமுள்ள 16 விமானங்களை ஸ்பெயின் நாட்டின் ஏர்பஸ் நிறுவனம் வழங்க இருப்பதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

இளைஞர்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி கர்நாடக மக்களவை உறுப்பினர் திரு தேஜஸ்வி சூரியா மேற்கொண்ட முயற்சி காரணமாக ஏராளமான இளைஞர்கள் தாமாகவே முன்வந்து உடற்பயிற்சி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அயர்ன்மேன் சேலஞ்ச் எனப்படும் இந்த இயக்கத்தின் மூலம் தேஜஸ்வி சூரிய பெரும் சாதனை படைத்திருப்பதாக பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கற்றலில் குறைபாடு தொடர்பான தன்மை குறித்த விழிப்புணர்வு ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதனையொட்டி புதுதில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்ற கட்டிடம், இந்தியா கேட் மற்றும் பிற அரசு அலுவலகங்கள் சிகப்பு வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இந்த குறைபாடு குறித்த பாதிப்புகளை நீக்குவதற்கும், இதனை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கற்றல் குறைபாடு உள்ளவர்களுக்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தி தர வேண்டும் என்பதை வலியுறுத்தும் பேரணி இன்று புதுதில்லியல் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஊழல் தடுப்பு கண்காணிப்பு வாரம் இன்று முதல் ஒருவார காலத்திற்கு அரசு அலுவலகங்களில் கடைபிடிக்கப்படுகிறது.

பொது வாழ்க்கையில் வெளிப்படைத்தன்மை ஊழற்றல சமுதாயத்தை உருவாக்குதல் என்ற குறிக்கோளுடன் ஆண்டுதோறும் ஊழல் கண்காணிப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான கருப்பொருள் நாட்டின் செழிப்புக்கான நேர்மையான கலாச்சாரத்தை உருவாக்குதல் என்பதாகும்.

மத்திய அரசின் அனைத்து அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்டவற்றில் ஊழல் ஒழிப்புக்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் இன்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைகேடுகளை தவிர்த்து வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பது தொடர்பான நிகழ்ச்சிகள் இந்த வாரம் முழுவதும் நடத்தப்படுகின்றன.

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய்படேல் பிறந்த தினம் இந்த வாரத்தில் கொண்டாடப்படுவதையொட்டி வாரம் முழுவதும் கண்காணிப்பு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் அக்னூர் பகுதியில் சென்ற ராணுவ வாகனத்தின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும், இதனையொட்டி பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை மேற்கொண்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

பட்டல் பகுதியில் உள்ள கிராமங்களில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாகவும், பொதுமக்கள் இந்த பகுதிகளில் அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார்.

தீவிரவாதிகளுகளுக்கும் - பாதுகாப்புப்படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

பஞ்சாப் மாநிலம் அம்ரிட்ஸரில் பாகிஸ்தானிலிருந்து கடத்தி வரப்பட்ட 105 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.,

பஞ்சாப் மாநில காவல்துறையின் உளவுப்பிரிவுக்குக் கிடைத்த தகவலின்பேரில் பல்வேறு வகையான போதைப்பொருட்களும், ஆறு கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு கவுரவ் யாதவ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து வரும் நீர்வழிப்பாதையில் இந்த கடத்தல் நடைபெற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தேடுதல் வேட்டை நடைபெறுவதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இன்று மாலை தீபாவளி கொண்டாடுகிறார்.

அமெரிக்கா முழுவதிலும் உள்ள இந்திய – அமெரிக்க பிரதிநிதிகள் இந்த விழா கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றனர்.

கடந்த காலங்களில் உள்ளதுபோலவே அதிபர் மாளிகையில் விளக்கு ஏற்றும் நிகழ்ச்சி நடைபெறும் என்றும் அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் விளக்கேற்ற உள்ளதாகவும் வெள்ளை மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நூதானா எனப்படும் தெற்காசிய நடன மற்றும் இசை நிகழ்ச்சியும் இந்த விழாவின் போது நடைபெறுகிறது.

[]<<<>>>[]

ஐ நா-வின் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் ஈரான் மீது கடந்தவார இறுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் அதிபர் மஜூத் **pezeshkian** கூறியுள்ளார்.

போர் ஏற்படுத்தும் நோக்கம் டெஹ்ரானுக்கு இல்லை என்று கூறிய அவர், இஸ்ரேலின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க வேண்டியது அவசியம் என்றார்.

ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் பதிலடி கொடுக்கும் நிலைமை உலகிற்கு கவலை ஏற்படுத்துவதாக உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் மாபெரும் ராணுவ அதிகார மையங்களாக திகழும் இந்த நாடுகள் சண்டையில் ஈடுபடுவது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், ஈரான் மீது நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் பேசிய இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு, ஈரானின் ஏவுதள உற்பத்தி மையத்தை தாக்கியிருப்பதாக கூறினார்.

எனினும் பெரும் பாதிப்பு ஏற்படவில்லை என்று ஈரான் கூறியுள்ளது.

[]<<<>>>[]

இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஏராளமான பாலஸ்தீனர்கள் அகதிகளாக தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்காக 25 மில்லியன் டாலர் நிதி அவசர உதவியாக ஐ நா வழங்கி உள்ளதாக பாலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன அகதிகள் விவகாரங்கள் துறையின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேலின் வெஸ்ட் பேங்க் பகுதியில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை மோசமாக உள்ளதாகவும், அவர்களுக்கான தற்காலிக குடியிருப்புகள் மற்றும் அவசர செலவுக்கான நிதியை வழங்குவதற்கு முன்னுரிமை தரப்படும் என்று கூறியுள்ளார்.

[]<<<>>>[]

23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.,

அல்பேனியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 57 கிலோ எடைப்பிரிவில் ஷிராக் சிக்காரா தங்கம் வென்றார்.

70 கிலோ எடைப்பிரிவில் சுஜித் காக்கலும், 97 கிலோ எடைப்பிரிவில் விக்கியும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**[]<<<>>>[]**

டக் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயூஷ் ஷெட்டி இரண்டாவது இடம்பிடித்தார்.

**[]<<<>>>[]**